ந.க.எண்.509/2022/இ1

நகராட்சி அலுவலகம்,
கூடலூர்.
நாள்:– 21.10.2022

**<u>சிறப்புக்கூட்ட அழைப்பிதழ்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் ஐப்பசி திங்கள் 4–ஆம் நாள் (அக்டோபர் மாதம் 21–ஆம் (நாள்:–21.10.2022) வெள்ளிக்கிழமையன்று காலை 11.00 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் சிறப்புக்கூட்டம் நடைபெற உள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
கூடலூர் நகராட்சி

## பொருள்.1

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.92, நாள்.24.06.2022, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.93, நாள்.24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.358, நாள்.24.06.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.24470/2022/MA2, நாள்.08.08.2022 கடிதத்தில் நகராட்சி பகுதியில் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திடவும் மற்றும் அதன் செயல்பாடுகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசு உத்தரவின்படி கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள 21 வார்டுகளில் வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திட பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியல் மற்றும் எல்லைகளின் விவரப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. அரசு உத்தரவின்படி தயார் செய்யப்பட்டுள்ள வார்டு குழு மற்றும் பகுதி சபா அமைத்திட பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியல், எல்லைகள் மற்றும் உறுப்பினர்களின் விவரப்பட்டியல் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பட்டியலினை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.217, அனுமதிக்கப்பட்டது.**

(ஒம்/-)லோ.பத்மாவதி
நகர்மன்றத்தலைவர்
கூடலூர் நகராட்சி